நபியசை் சார ்ந ்த சம□கமாய ்த ் திகழ....

ம ுஸ ்லிம ்களின ் விவகாரங ்களில ் ஒவ ்வ ொர ு ம ுஸ ்லிம ும ் தனித ் தனியாகக ் கவனம ் சல ுெத ்த ுவத ு சாத ்தியமில ்லை. அத ு தனத ு சக ்திக ்கப ்பாற ்பட ்ட விடயம ் என ்றே தனி மனிதன ் கர ுத ுவான ். பின ்னர ் அந ்தக ் கவலயைகை ் க□ட தனி மனிதன ் விட ்ட ுவிட ுவான ். அதற ்க ு சிறந ்த உதாரணம ்,
இன ்ற ு எகிப ்தில ் ம ுஸ ்லிம ்கள ுக ்கதிெராக அமரிெக ்காவின ் அடிவர ுடிகள ் கட ்டவிழ ்த ்திர ுக ்க ும ் அக ்கிரமங ்கள ும ் பட ுகொலகைள ுமாக ும ். ஜனநாயகத ்தயைும ் மனித உரிமகைளயைும ் ச ுதந ்திரத ்தயைும ் அழித ்த ு அடக ்க ும ுறகைள ுக ்கதிெராக க ுரல ் கொட ுப ்பதற ்க ு வீ திக ்க ு வந ்திர ுக ்க ும ் ஆயிரக ்கணக ்கான நிராய ுதபாணிகள ் அமரிெக ்காவின ் பொம ்மை இராண ுவத ்தால ் ஈவிரக ்கமின ்றிப ் பட ுகொலை சயெ ்யப ்பட ுகின ்றனர ்.

எனின ும ், ஆசிய ம ுஸ ்லிம ்களிடயைே அத ு ஓர ு கவலயையைோ அதிர ்வலயையைோ ஏற ்பட ுத ்தியமகைக ்கான அடயைாளங ்கள ் எதனயைும ் வளிெப ்படயைாகக ் காண ம ுடியவில ்லை. இத ுதான ் தனி மனிதர ்களின ் நிலை. தனி மனிதர ்கள ் தங ்களத ு ஓர ு விடயமாகக ் கர ுதி இதில ் கவனம ் சல ுெத ்தமாட ்டார ்கள ். காரணம ், இத ு அவர ்களத ு சக ்திக ்க ு அப ்பாற ்பட ்டத ு. எனவதோன ் தனி மனிதர ்களால ் சல ுெத ்த ம ுடிய ுமான சிறியளவிலான கவனத ்தை இற ுதியாகவ ும ் சல ுெத ்தப ்பட வணே ்டிய பரிெய கவனத ்தை ம ுதல ் அம ்சமாகவ ும ் இங ்கே நாம ் ஒழ ுங ்க ுபட ுத ்திக ் கொள ்கிறோம ்.

“ம ுஸ ்லிம ்களின ் விவகாரங ்களில ் கவனம ் சல ுெத ்தாதவர ்கள ் எம ்மசை ் சரே ்ந ்தவர ்களல ்லர ்” என ்ற நபிமொழி கவனம ் சல ுெத ்தாத தனி மனிதனயைும ் எச ்சரிக ்கின ்றத ு. கவனம ் சல ுெத ்தாத சம□கத ்தயைும ் எச ்சரிக ்கின ்றத ு. க ுறித ்த நபிமொழியில ் வந ்திர ுக ்க ும ் (மன ்ன) என ்ற பிரயோகம ் இரண ்டயைும ் க ுறிப ்பதற ்க ுப ் பயன ்பட ுத ்தப ்பட ுகின ்றமை அரப ு மொழி அறிவ ுள ்ளவர ்கள ுக ்க ுத ் தரிெய ும ்.

ம ுதலில ் சம□கம ் என ்ற கர ுத ்தில ் இதன ் விளக ்கத ்தபை ் பார ்ப ்பபோம ். ம ுஸ ்லிம ் சம□கம ்

நபியைச் சார்ந்த சமூகமாய்த் திகழ....
Wednesday, 20 November 2013 08:34

முஸ்லிம் சமூக விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்பதனை இந்த நபிமொழி வலியுறுத்தியுள்ளது. முஸ்லிம் சமூகம் முஸ்லிம் சமூக விவகாரங்களில் கவனம் செலுத்துவதற்கு பல்வேறு ஏற்பாடுகள் இருக்க வேண்டும். அந்த ஏற்பாடுகள் இல்லாத நிலையில் முஸ்லிம் சமூகத்தினால் முஸ்லிம் சமூக விவகாரங்களில் கவனம் செலுத்துவது சாத்தியமில்லை.

முஸ்லிம் சமூக விவகாரங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான ஏற்பாடுகளும் இருக்க வேண்டும். அந்த ஏற்பாடுகளை ஒருங்கிணைத்து வழிநடத்தும் கூட்டு ஏற்பாடுகளும் இருக்க வேண்டும். அப்போதுதான் முஸ்லிம் சமூகம் தனது பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றி நபியைச் சார்ந்த ஒரு சமூகமாகத் திகழலாம்.

முதலில் இந்த ஏற்பாடுகளுக்கான சில உதாரணங்களைப் பார்ப்போம்.

உணவு உற்பத்திகளில் ஹலால் ஹராம் வரையறைகளைப் பேணுவதற்கும் அவ்வாறு பேணப்படாத உற்பத்திகளைத் தவிர்ப்பதற்கும் “ஹலால் சான்றிதழ்படுத்தும்” நிறுவனங்கள் உலகில் இயங்கி வருகின்றன. இது முஸ்லிம் சமூக விவகாரம் ஒன்றில் கவனம் செலுத்துவதற்கான ஓர் ஏற்பாடாகும். இந்த ஏற்பாடு இருப்பதனால் தனி மனிதர்கள் தங்களை ஹராமான உற்பத்திகளை உட்கொள்ளாமல் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

மற்றுமோர் ஏற்பாடு, பண நடவடிக்கைகளில் காணப்படுகின்ற ஹராம்களிலிருந்து முஸ்லிம்களுக்கு ஒருவித பாதுகாப்பை வழங்குவது. அதுதான் இஸ்லாமிய வங்கிகள். தற்போதுள்ள இஸ்லாமிய வங்கி முறைமைகளில் இன்னும் மாற்றங்கள் வரவேண்டும் என்று கூறுபவர்கள் இருந்த போதிலும், ஒரு முஸ்லிம் சமூக விவகாரத்தைக் கவனிக்கும் ஏற்பாடாக இத்தகைய வங்கிகள் தொழிற்படுவதை மறுக்க முடியாது.

முஸ்லிம் சமூக விவகாரம் ஒன்றைக் கவனிக்கும் மற்றுமோர் ஏற்பாடு மஸ்ஜித்களாகும். முஸ்லிம்கள் தினமும் ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றி தமக்கும் தமது இரட்சகனுக்குமிடையிலான உறவைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இந்த ஏற்பாடு இன்றியமையாததாகும்.

அரபு மத்ரஸாக்கள் மார்க்கக் கல்வியை முஸ்லிம் சமூகத்தில் வளர்க்கின்ற மற்றுமோர் ஏற்பாடாகும். முஸ்லிம் சமூகத்தில் மார்க்க நெறிமுறைகளைப் பிரசாரம் செய்து, பயிற்றுவித்து சன்மார்க்க விழுமியங்களோடு மக்களை வாழச் செய்வதற்கான

2 / 8

நபியைச் சார்ந்த சமூகமாய்த் திகழ....
Wednesday, 20 November 2013 08:34

மற்றுமோர் ஏற்பாடாக இஸ்லாமிய இயக்கங்கள் இருக்கின்றன.

பிறைக் குழுக்கள், ஸகாத் கமிட்டிகள், ஜனாஸா நலன்புரிச் சங்கங்கள், அஹதிய்யா மற்றும் குர்ஆன் மத்ரஸாக்கள், பாலர் பாடசாலைகள் என முஸ்லிம் சமூக விவகாரங்களுக் கான பல்வேறு ஏற்பாடுகள் முஸ்லிம் சமூகத்தில் காணப்ப டுகின்றன. இந்த ஏற்பாடுகள் அனைத்திலும் நிவர்த்திக்கப்பட வேண்டிய குறைகள் இருந்தபோதிலும்.... இந்த ஏற்பாடுகளில் காணப்படுகின்ற விளைதிறன் மற்றும் வினைதிறன் என்பன பற்றி பெருமளவு பேசப்படவேண்டிய, விவாதிக்க வேண்டிய குறைகள் இருந்தபோதிலும் இவை முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு விவகாரங்க ளைக் கவனிப்பதற்கான ஏற்பாடுகள் என்பதை மறுப்பதற்கில்லை.

இத்தகைய ஏற்பாடுகளில் கவனம் செலுத்தாதவர்கள் முஸ்லிம் சமூக விவகாரங்களில் கவனம் செலுத்தாத வர்கள் என்ற நபிமொழிக்குள் அடக்கப்படுவர். அவர்கள் நபியைச் சேர்ந்தவர்கள் என்ற அந்தஸ்தைப் பெறுவதும் இதனால் கேள்விக்குறியாகலாம்.

இது இவ்வாறிருக்க, முஸ்லிம் சமூக விவகாரங்கள் இவற்றோடு முடிந்து விட்டதாக முஸ்லிம்கள் கருத முடியாது என்பதனையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவற் றிற்கு மேலாலும் முஸ்லிம் சமூக விவகாரங்கள் உண்டு. அவற்றை முஸ்லிம் சமூகம் தமது விவகாரமல்ல என ஒதுக்கி விட முடியாது. அல்லது நாம் அவற்றைக் கவனிக்க வேண்டி யதில்லை அல்லாஹ் கவனித்துக் கொள்வான் என்று முஸ்லிம் சமூகம் அந்த விவகாரங்களை புறம்தள்ளி விட முடியாது. அவற்றைப் புறந்தள்ளினாலோ அல்லது கவனிக்காது விட்டாலோ முஸ்லிம் சமூகம் நபியைச் சார்ந்திருக்கும் சமூகமாக இருக்க முடியாது.

“அல்லாஹ் கவனிப்பான் நாம் கவனிக்க வேண்டிய தில்லை” என்றொரு கருத்து சமூகத்தில் இருப்பதனால் அதற்கு சிறியதொரு விளக்கம் இவ்விடத்தில் சொல்லப்படுவது பொருத்தமாகும் எனக் கருதுகிறேன். “முஸ்லிம்களின் விவகாரங்களில் கவனம் செலுத்தாதவர்கள் எங்களைச் சேர்ந்தவர்களல்லர்” என்ற நபிமொழியே இந்தக் கருத் துக்கு மறுப்பாக இருக்கின்றது. முஸ்லிம்களே! உங்களது விவகாரங்களை முதலில் நீங்கள் கவனியுங்கள். அதன் பிறகு அல்லாஹ் கவனிப்பான் அவ்வாறு கவனிக்காதவர்கள் என்னைச் சேர்ந்தவர்களல்லர் என்று எச்சரிக்கின்றது இந்த நபிமொழி. இதனை சந்தேகத்துக்கிடமில்லாமல் வலியுறுத்துகின்ற மற்றோர் ஆதாரம் பின்வரும் குர்ஆன் வசன மாகும்:

“ஒரு சமூகம் தன்னை மாற்றிக் கொள்ளாதவரை நிச்சயமாக அல்லாஹ் அந்த சமூகத்தின் நிலையை மாற்றப் போவதில்லை.”

3 / 8

நபியைச் சார்ந்த சமூகமாய்த் திகழ....
Wednesday, 20 November 2013 08:34

அடக்குமுறை, அநீதி, சர்வாதிகாரம் போன்ற அக்கிரமங்களை மாற்றுவதற்காக எகிப்து மக்கள் இன்று அனுபவிக்கின்ற துன்பங்களை சிறிது நோக்குங்கள். அத்தகைய துன்பங்கள் மூலம் நிச்சயம் அந்த மண்ணில் நாளை அல்லாஹ் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவான். அவர்கள் ஆயுதங்களின்றி வெறும் கையோடு அநீதியை மாற்றுவதற்கு நடத்தும் சாத்வீகப் போராட்டத்தில் அல்லாஹ் மாற்றுக் காரணியாக நிச்சயம் தொழிற்படுவான் என்பதை மேற்கூறப்பட்ட வசனம் எமக்குணர்த்துகிறது. இந்தவகையில் “அல்லாஹ் கவனிப்பான் நாம் கவனிக்க வேண்டியதில்லை” என்ற கூற்று இஸ்லாத்தின் அடிப்படைகளுக்குப் பொருந்துவதாக இல்லை. அத்தகைய கூற்றுக்கள் முஸ்லிம் சமூக விவகாரங்களில் அக்கறையில்லாத் தன்மையை வளர்ப்பதற்கும் முஸ்லிம்களை நபியைச் சாராதவர்களாக மாற்றுவதற்குமே உதவும்.

முஸ்லிம் சமூகம் இதுவரை கவனம் செலுத்தாத விடயங்கள் பல இருக்கின்றன. அவற்றில் முஸ்லிம் சமூகத்தின் கவனம் குறைவு என்றோ இல்லை என்றோ குறிப்பிட வேண்டும். அத்தகைய விவகாரங்கள் சிலவற்றை உதாரணங்களாக இங்கு நோக்குவோம்.

அவற்றுள் முதன்மையானது முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையாகும். இது இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகவும் இருக்கிறது. இதனை சாதித்து விட்டதாக சிலர் கருதுகின்றனர். சிலர் இதனை சாதிக்க முடியாது சாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றனர். இன்னும் சிலர் வெளிரங்கத்தில் ஒற்றுமையும் அந்தரங்கத்தில் அவசியமில்லை என்ற நிலைப்பாட்டையும் கொண்டவர்களாக செயல்படுகிறார்களோ என்று எண்ணவும் தோன்றுகின்றது.

முதலில் ஒற்றுமை என்பது பேச்சல்ல... சொற்பொழிவல்ல... முரண்பட்டவர்கள் ஓரிடத்தில் அமர்வது மட்டுமல்ல... ஒற்றுமைக்கான வழிகாட்டல்களை வழங்குவது மட்டுமல்ல... இவை அனைத்தும் இந்தப் பாதையின் முதல், இரண்டாவது எட்டுக்களாக இருக்கலாம். அந்த எட்டுக்களோடு நின்று விட்டால் ஒற்றுமை வந்துவிடாது. இது ஒரு சிக்கலான பாதையில் செல்ல வேண்டிய நீண்ட பயணம் என்பதை உணர வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தின் அனைத்துத் தரப்பினர்களிடையேயும் நம்பிக்கைகள், நல்லெண்ணங்கள் வளர்க்கப்பட்டு ஒரு தரப்பினர் மற்றொரு தரப்பினரை மதிக்கும், கௌர விக்கும், அங்கீகரிக்கும் நிலை உருவாக்கப்படல் வேண்டும். இந்நிலை முரண்பாடுகளுக்கும் வேறுபாடுகளுக்கும் மத்தியில்தான் உருவாக்கப்படலாம் அனைத்து வேறுபாடுகளும் களையப்பட்டதன் பின்னர் அல்ல. அனைத்து வேறுபாடுகளும் களையப்பட்டதன் பின்னர்தான் ஒற்றுமை வரமுடியும் என்று ஒரு தரப்பினர் கருதினால், அவர்கள் தமது தரப்பில் அனைவரும் இணைந்து ஒன்றுபடுவதில் மட்டுமே ஒற்றுமை இருக்கிறது என்று ஆழமாக விசுவாசிப்பர்.

4 / 8

நபியைச் சார்ந்த சமூகமாய்த் திகழ....
Wednesday, 20 November 2013 08:34

இத்தகைய நம்பிக்கைகள், நல்லெண்ணங்கள் வளர்க்கப்படுவதற்கு சிலர் ஒரு புதுமையான வழிமுறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். புன்னகைத்து, ஸலாம் கூறி, கை குலுக்கி, சுகம் விசாரித்து, பொது விவகாரங்களைப் பேசிவிட்டு கலைந்து செல்வதுதான் அவ்வழி. ஒருவரிடம் இருக்கின்ற.... அல்லது ஓர் அமைப்பிலிருக்கின்ற... எந்தக் குறையையும் போதாமையையும் தொட்டுக் கூடப் பார்க்காமல் ஒற்றுமையாக இருப்போம் என்பதே அந்தப் புதுமையான முயற்சி.

ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கான முயற்சி இந்தப் பாணியில் நடைபெறுவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

1. ஒருவரின் அல்லது ஒரு தரப்பின் போதாமைகளை வெளிப்படுத்தும் அழகிய அற்புதமான மொழி தெரியாதிருப்பது.

2. அத்தகைய மொழியால் வெளிப்படுத்தினாலும் அதனை அங்கீகரித்து அதிலுள்ள நல்லம்சங்களை ஜீரணித்துக் கொள்வதற்குத் தேவையான உயர்ந்த பண்பு நலன்கள் இல்லாதிருப்பது. இத்தகைய குணங்களால் உள்ளங்கள் இணைவது சாத்தியமில்லை. மாறாக, இவற்றிற்கு நேர் எதிரான நற்குணங்களால் உள்ளங்கள் இணைய முடியும் என்பதை அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது.

“அழகான வழிகளில் மறுப்புக் கூறுங்கள்.... அப்போது யாருடன் உங்களுக்குப் பகைமை இருந்ததோ அவர் உங்களது உற்ற நண்பனாகி விடுகிறார்.” (41: 34)

இந்த வசனத்தின் முதல் பகுதி அழகிய மொழியை வேண்டி நிற்கிறது. அழகிய மொழி தெரியாவிட்டால் மிக அழகான முறையில் மறுப்புக் கூறவோ தவறுகளை சுட்டிக்காட்டவோ முடியாது. வசனத்தின் இரண்டாம் பகுதி உயர்ந்த பண்பு நலன்களை வேண்டி நிற்கின்றது. உயர்ந்த பண்பு நலன்கள் இல்லாதவர் அழகிய மறுப்புக் கூறுபவ ரோடு ஆத்ம நண்பராக முடியாது.

ஆக, குர்ஆன் கூறும் இந்த வழியில் இணக்கம், ஐக்கியம் நோக்கி முன்னேறுவதே மிகவும் சிறப்பானது.

5 / 8

இந ்த வகையில ் ஒற ்றுமகை ்கான ஒரு பாரிய ஏற ்பாடு சமூகத ்தில ் துவக ்கப ்பட வணே ்டும ். அதுதான ் அழகிய மொழியில ் எப ்படிப ் பசே வணே ்டும ் என பதற ்கான பயிற ்சி. இத ்தகயை பயிற ்சிகளை வழங ்கும ் பயிற ்சி நிலயைங ்கள ் நவீ ன உலகில ் நிறயைவே இருக ்கின ்றன. முஸ ்லிம ் உலகில ் துரதிஷ ்டம ் அவற ்றகை ் காணமுடியாதிருக ்கிறது. அழகாகப ் பசேத ் தரியாத... முரண ்படும ் சூழ ்நிலகைளில ் தமது கருத ்துக ்களை அழகாக முன ்வகை ்கத ் தரியாத சமூகம ் ஒருபோதும ் ஒன ்றுபடப ் போவதில ்லை.

அதே நரேம ் அழகிய மொழியில ் முன ்வகை ்கப ்படும ் கருத ்துக ்களயைும ் சிந ்தனகைளயைும ் வழிகாட ்டல ்களயைும ் விமர ்சனங ்களயைும ் பருமெனதரோடு ஏற ்றுக ்கொள ்ளும ் பண ்பாட ்டுப ் பயிற ்சியும ் பாசறை பாசறயைாகத ் துவக ்கப ்படல ் வணே ்டும ். இத ்தகயை பாரிய ஏற ்பாடுகள ் இல ்லாது இந ்தப ் பத ்தியில ் ஏற ்கனவே கூறிப ்பிடப ்பட ்டது போன ்ற அந ்தப ் புதுமயைான வழியில ் ஒற ்றுமை ஏற ்பட முடியாது.

சந ்திப ்புக ்கள ், கலந ்துரயைாடல ்கள ் என பவற ்றோடு கூட ்டாக ஒன ்றிணைந ்து சமூகத ்தை சீ ரியதொரு பாதயைில ் வழிநடத ்துவதற ்குத ் தவேயைான வழிகாட ்டல ்களயைும ் சயெல ் திட ்டங ்களயைும ் தயாரிக ்க வணே ்டும ். அத ்திட ்டங ்களை சயெல ்படுத ்தும ் நோக ்கில ் அனவைரும ் களத ்தில ் ஒன ்றிணைந ்து வலேை சயெ ்வதற ்குப ் பொருத ்தமான சூழ ்நிலகைளதை ் தோற ்றுவித ்தல ் வணே ்டும ்.

இவ ்வாறான பாரிய ஏற ்பாடுகளில ் கவனம ் சலுத ்துவதே முஸ ்லிம ்களின ் விவகாரங ்களில ் கவனம ் சலுத ்துவதாகும ்.

மலேும ் முஸ ்லிம ் சமூகத ்தின ் கல ்வி, பொருளாதாரம ் மற ்றும ் பாதுகாப ்பு, இனங ்களுக ்கிடயைிலான புரிந ்துணர ்வு, நல ்லிணக ்கம ், சகவாழ ்வு, முஸ ்லிம ் சமூகத ்தை பாவங ்கள ், குற ்றச ் சயெல ்களிலிருந ்து பாதுகாத ்தல ், முஸ ்லிம ் சமூகத ்தை ஏனயை சமூகங ்கள ் பிழயைாகப ் புரிந ்து கொள ்ளாத வகயைில ் அந ்தச ் சமூகத ்தின ் வாழ ்வியல ் ஒழுங ்குகளை மீ ளமதை ்தல ் போன ்ற இன ்னோரன ்ன சயெற ்பாடுகளுக ்கு சமூகத ்தில ் பாரிய ஏற ்பாடுகள ் தவேபை ்படுகின ்றன. “முஸ ்லிம ்களின ் விவகாரங ்களில ் கவனம ் சலுத ்தாதவர ்கள ் எம ்மசை ் சரே ்ந ்தவர ்களல ்லர ்” என ்ற நபிமொழி இது போன ்ற விவ காரங ்கள ் அனதை ்திலும ் கவனம ் சலுத ்தாமல ் இருப ்பதை எச ்சரிக ்கின ்றது.

“முஸ ்லிம ்களது விவகாரங ்களகை ் கவனித ்தல ்” என ்ற அம ்சத ்தை பசியில ் இருக ்கும ் பக ்கத ்து வீ ட ்டகை ் கவனித ்தல ், பிச ்சை கடே ்டு வரும ் மனிதனை விரட ்டாமல ் அவனது பாத ்திரத ்தில ் சில சில ்லறகைளபை ் போடுதல ் போன ்ற விடயங ்களோடு மட ்டுப ்படுத ்தி விடக ்கூடாது. முஸ ்லிம ்களின ் விவகாரங ்கள ் மிகவும ் பரந ்துபட ்டவயைாகும ். அவற ்றை தனிமனிதர ்களால ் கவனிக ்க முடியாது. சமூகமும ் சமூகத ்தின ் பொறுப ்பாளர ்களும ் தான ்

நபியைச் சார்ந்த சமூகமாய்த் திகழ....
Wednesday, 20 November 2013 08:34

அவற்றைக் கவனிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அந்த ஏற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத போது மேற்க்குறிப்பிட்ட நபி மொழியின் படி இந்த சமூகம் நபியைச் சார்ந்த சமூகமாக இருக்காது.

தனி மனிதர்களுக்கும் முஸ்லிம்களின் விவகாரங்களில் அக்கறை இருக்க வேண்டும். எனினும், அந்த அக்கறையின் எல்லை மிகவும் சுருங்கியதாகவே இருக்கும். ஒரு தனிமனிதன் மற்றுமொரு தனிமனிதன் மீது காட்டும் அக்கறையாகத்தான் அது பெரும்பாலும் இருக்க முடியும். மொத்த சமூகத்திற்காகவும் ஒரு தனிமனிதன் பாரியளவில் எதனையும் செய்ய முடியாது. விதிவிலக்கான ஒரு சில தனிமனிதர்களைத் தவிர, நளீம் ஹாஜியாரை அவ்வாறதொரு தனிமனிதராக அடையாளப்படுத்தலாம். அவர் சமூகத்திற்கு இன்றியமையாத ஒரு முக்கியமான துறையில் தனது சமூகப்பங்களிப்பை வழங்கியுள்ளார்.

சமூகத்தின் தலைவர்கள் தங்களைத் தனி மனிதர்களாகக் கருதக்கூடாது. காரணம், அவர்களது கைகளில் சமூகத்தின் எத்தனையோ வளங்கள் இருக்கின்றன.

அவர்களது சமூகத்தின் பாரிய விவகாரங்களில் அக்கறையுடையவர்களாகவும் கவனம் செலுத்தபவர்களாகவும் இருக்க வேண்டும்.

தனிமனிதர்களில் அதிகமானோர் அவ்வாறிருக்க மாட்டார்கள். அவர்கள் அதிகபட்சம் சில தனிமனிதர்களின் விவகாரங்களில் கவனம் செலுத்தபவர்களாகவோ அல்லது அதுவும் இல்லாதவர்களாகவோ இருப்பர். அவர்கள் தனிப்பட்ட ரீதியில் சமூகவிவகாரங்களில் கவனம் செலுத்துவதாக இருந்தால் அது சமூகத்தின் நலனுக்காக துஆ செய்வது ஒன்றைத் தவிர வேறெதுவுமிருக்காது. அதனையும் கூட்டாக செய்வதாயின் சமூகத்தின் பொறுப்பாளர்கள் அதனை வேண்டிக் கொள்ள வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் சமூகம் அதிலும் கரிசனையற்றதாகவே இருக்கும். எகிப்தில் ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள் நடத்தும் பயங்கரமான மனிதப் படுகொலைகளுக்கு எதிராக துஆ செய்யும் கரிசனையொன்றை இலங்கை முஸ்லிம் சமூகத்திடம் காணவில்லை என்பதை இந்த ரீதியில் நோக்க வேண்டியிருக்கிறது. முஸ்லிம்களின் விவகாரங்களில் அந்தளவுகூட கரிசனையும் கவலையுமற்றுப் போகும் நிலை ஏற்படுவது இந்த உம்மத்தின் உயிர்த்துடிப்பில் வினாக் குறியை எழுப்புகின்றது.

ஆக, முஸ்லிம்களின் விவகாரங்களில் கவனம் செலுத்தும் பாரிய பொறுப்பு சமூகத்தையும் அதன் பொறுப்பாளர்களையுமே சாரும். முஸ்லிம் சமூகத்தை நபியைச் சார்ந்திருக்கும் சமூகமாக மாற்றுவதற்கு அவர்கள் பெரு முயற்சி எடுக்க வேண்டும். சமூகத்தின் அனைத்து தளங்களிலும் பணியாற்றி அவற்றில் முஸ்லிம்கள்

7 / 8

நபியைச் சார்ந்த சமூகமாய்த் திகழ....
Wednesday, 20 November 2013 08:34

அனைவரையும் பாரபட்சமின்றிப் பங்கு கொள்ள வைக்கும் முயற்சியிலேயே இது தங்கியுள்ளது.

முஸ்லிம்களின் விவகாரங்களில் கவனம் செலுத்தி நபியைச் சார்ந்த சமூகமாகத் திகழ முஸ்லிம் சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பாளர்கள் முன்வருவார்களாக!

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்,

அமீர், இலங்கை ஜமாத்தே இஸ்லாமி

source: http://usthazhajjulakbar.org/

8 / 8